வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

**அரசு தரப்பு சாட்சி 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோகுல பாண்டிய சங்கர் | தாலுக்கா | : | ஆண்டிபட்டி |
| தகப்பனார் பெயர் | : | ராமசாமி | தொழில் | : | மருத்துவர் |
| ஊர் | : | ஆண்டிபட்டி | வயது | : | 48/2024 |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 27.09.2024.

அரசு தரப்பில் 18ம் சாட்சியின் முதல் விசாரணை

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 22.01.2021 அன்று தேனி அரசு மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றியபோது, பிற்பகல் 01.05 மணியளவில் ஜெயமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 10/2021 தொடர்புடைய ஆனந்தராஜ் என்ற பெயருடைய ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கான வேண்டுகோள் விண்ணப்பத்தினை தேவதானப்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளரிடமிருந்து பெற்றுக் கொண்டேன். அன்றைய தினமே பிற்பகல் 02.10 மணியளவில் பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன். பிரேதமானது தலைமை காவலர் எண் 1069 திரு.அய்யப்பன் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டது. பிரேத பரிசோதனையின்போது, எரிந்த நிலையிலான ஆண் பிரேதம் 3 துண்டுகளாக காணப்பட்டது.

1) தலையுடன் கூடிய உடல் ஒரு துண்டாகவும்,

2) பாதப்பகுதி இல்லாத வலது கால் இன்னொரு துண்டாகவும்,

3) இடது கால் மற்றொரு துண்டாகவும் காணப்பட்டது.

பிரேதத்தின்மீது இறப்பிற்கு பிந்தைய நிலையிலான தீக்காயங்கள் காணப்பட்டது, சிறிய அளவிலான புழுக்கள் நெஞ்சகப் பகுதியில் காணப்பட்டது. நாக்கு வெளி தள்ளிய நிலையில் காணப்பட்டது.

<u>இறப்பிற்கு முந்தைய நிலையிலான காயங்கள்</u>

1) தலைப் பகுதி பரிசோதனையின்போது, தலையின் பின்பகுதியில் 6 x 4 செமீ அளவில் தலைத்தோலுக்கு அடியிலான ரத்தம் தோய்ந்த காயம் காணப்பட்டது. மூளைப் பகுதி ரத்தக்கறை படிந்த நிலையில் களிம்பு போன்ற நிலையில் இருந்தது.

2) கழுத்துப்பகுதி பரிசோதனையில் கழுத்தின் முன்புறமும், வலதுபுறமும் சாய்வான நிலையில் 13 x 3 முதல் 4 செமீ அளவில் அழுத்தம் கொடுத்ததால் ஏற்பட்ட சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அதன் அடியிற்கண்ட திசுக்களும், தைராய்டு குறுத்தெலும்பும் ரத்தச்செறிவுடன் காணப்பட்டது. தைராய்டு குறுத்தெலும்பு அதன் வலதுபுறம் முறிந்து காணப்பட்டது. நாவடி எலும்பு சீராக காணப்பட்டது. இருதயம், நுரையீரல், மண்ணீரல், வயிற்றுப்பகுதி வெந்த நிலையில் இருந்தது. முச்சுக்குழாய் மற்றும் உணவுக்குழல் பகுதியில் எவ்வித கரி பொருள்கள் எதுவும் தென்படவில்லை. தலைப்பகுதி மற்றும் தலை எலும்பு மற்றும் வலதுகால் தொடை எலும்பு சேகரித்து உரிய காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டது. உள்ளுறுப்புகள் சேகரித்து ரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

எனவே இறப்பிற்கான காரணம் நிலுவையில் இருப்பதாக கூறி முதல்நிலை பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். 26.03.2021 அன்று பெறப்பட்ட ரசாயன பரிசோதனை அறிக்கையில் உள்ளுறுப்புகளில் எவ்வித நச்சுப் பொருளும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்குறிப்பிட்ட நபர் அவர் கழுத்தை கொடூரமாக இறுக்கியதால் வாயு பரிமாற்றம் தடை ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்று கருத்துக்கூறி இறுதி கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய **பிரேத பரிசோதனை**

**அறிக்கை அசாஆ 12. இறுதி அறிக்கை அசாஆ 13** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை ஆய்வாளர் 24.01.2021 தேதியில் விசாரித்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எனது இறுதி அறிக்கையில் இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு 2 முதல் 5 நாட்களுக்கு முன்பு இறந்திருக்கலாம் என்று கருத்து கூறியுள்ளேன் என்றால் சரிதான். தீக்காயங்கள் எந்த Degree தீக்காயங்கள் என்று எனது பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறவில்லை என்றால் Charred Body என்று குறிப்பிட்டுள்ளேன். Charred Body என்றாலும், எந்த Degree என்று குறிப்பிட முடியும் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை 2 முறை விசாரித்தார். முதல் முறை என்னை ஆய்வாளர் விசாரித்தபோது, காயங்களின் தன்மை பற்றியும், எவ்வாறு ஏற்பட்டிருக்கலாம் என்பது பற்றியும் விசாரித்து தெரிந்து கொண்டார் என்றால் சரிதான்.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே ,
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால்,
கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு
படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை,
ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில்
கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
27.9.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண் 119/2022

**அரசு தரப்பு சாட்சி 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்ராஜ் | தாலுக்கா | : | தேனி |
| தகப்பனார் பெயர் | : | சுப்பையா | தொழில் | : | சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| ஊர் | : | முல்லைநகர் | வயது | : | 61/2024 |

<u>(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்)</u>

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1973ம் ஆண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 231ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. நாள் 27.09.2024.

<u>அரசு தரப்பில் 19ம் சாட்சியின் முதல் விசாரணை</u>

நான் வீரபாண்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி தற்போது பணி ஓய்வு பெற்று விட்டேன். கடந்த 21.01.2021ம் தேதி ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றியபோது, அன்றைய தினம் மாலை 3மணியளவில் வைகைபுதூர் கிராம நிர்வாக அலுவலர் ராஜவேல் என்பவர் நிலையத்தில் ஆஜராகி எழுத்துமூலம் கொடுத்த புகாரை பெற்று, ஜெயமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 10/2021 பிரிவு 302மற்றும் 201 இதச–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பெற்ற புகார் ஏற்கனவே அசாஆ1 ஆக அதசா 1 மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ14** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஜெயமங்கலம் காவல் நிலையத்திற்கு ஆய்வாளர் உண்டு என்றால் தேவதானப்பட்டி மற்றும் ஜெயமங்கலம் சேர்த்து ஒரு ஆய்வாளர் ஆகும். ஆய்வாளர்

அலுவலகம் ஜெயமங்கலம் காவல் நிலையத்தில் உள்ளது என்றால் ஆய்வாளருக்கு தனியாக அலுவலகம் கிடையாது, காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் அறையை அவர் பயன்படுத்திக் கொள்வார், தேவதானப்பட்டி காவல் நிலையத்தில்தான் ஆய்வாளருக்கு தனி அறை உள்ளது. தேவதானப்பட்டிக்கும், ஜெயமங்கலத்திற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 5 கிமீ துாரமிருக்கும். ஒரு குற்றம் தொடர்பாக எங்கள் காவல் நிலையத்தில் தகவல் தெரிந்தால் GD Entry போட்டு குற்றம் நடந்த இடத்திற்கு செல்வது வழக்கம் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். அசாஆ 1 புகாரில் " **எனக்கு கிடைத்த தகவலின்பேரில்**" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் யார் தகவல் கொடுத்தார், எப்படி கொடுத்தார் என்று கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரித்தனோ என்றால் விசாரித்தேன், எனக்கு தகவல் சொன்னார்கள் என்று என்னிடம் சொன்னார், யார் தகவல் கொடுத்தார் என்று நான் குறிப்பிட்டு விசாரித்தேனா என்றால் விசாரித்தபோது, நீதிமன்றத்தில் விசாரிக்கும்போது சொல்வதாக சொன்னார், என்னிடம் சொல்லவில்லை, சொன்னால் பிரச்சனை வரும் என்று சொன்னார். ஜெயமங்கலம் காவல் நிலையத்திலிருந்து இறந்த நபரின் உடல் எத்தனை துாரத்தில் கிடந்தது என்றால் 2 கிமீ துாரமிருக்கும். புகாரை கிராம நிர்வாக அலுவலர் எப்போது, எங்கு வைத்து தயார் செய்தார் என்று நான் கேட்கவில்லை. முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலம் கொண்டு சென்ற காவலருக்கு கடவுச்சீட்டு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். கிராம நிர்வாக அலுவலர் என்னிடம் புகார் தந்தபோது ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. வழக்கு பதிவு செய்வதற்கு எவ்வளவு நேரமானது என்றால் சுமார் 45 நிமிடம் இருக்கும். ஆய்வாளர் காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு வந்தார் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சுமார் ஒருமணி நேரத்தில் வந்தார். சம்பவ இடத்திற்கு நான் சென்றேனா என்றால் ஆய்வாளருக்கு உதவியாக நான் சென்றேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததது சம்பந்தமாக பொது நாட்குறிப்பில் எழுதியுள்ளேன். பிணம் கிடப்பது சம்பந்தமாக முதலில் எனக்கு தகவல் கிடைத்தது என்றும், அதை நான் மறைத்து விட்டேன் என்றாலும் சரியல்ல. புகார்

மனு கிடைத்ததற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்துவிட்டு, பின்னிட்டு புகார் மனு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலருடன் தலையாரி வந்தாரா என்றால் வந்தார். புகார் மனுவில் தலையாரி சாட்சி கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை.

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே , என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(ஒம்/- S.சமீனா)
27.9.2024
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.